**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC.1941/2025**

**Prosecution witness : அ.சா.3** **Date : 23.01.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜ்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பஞ்சுகாளிப்பட்டியில் குடியிருந்து தறி நெய்து வருகிறேன். கடந்த 09.09.2024ம் தேதி இரவு 9 மணிக்கு மேச்சேரி கணபதி சூப்பர் மார்க்கெட் அருகே இருந்த போது புஷ்பராஜ் என்பவர் TN 52 X 9230 Honda Unicorn மோட்டார் சைக்கிளில் சம்பு என்பவரை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு தொப்பூரிலிருந்து மேச்சேரி சாலையில் வடக்கிலிருந்து தெற்காக வந்து கொண்டிருந்த போது அதே சாலையில் எதிர்திசையில் மேச்சேரி பக்கமிருந்து வந்த இரு சக்கர வாகனம் வேகமாக வந்து மோதி விபத்து ஏற்பட்டது.

2) புஷ்பராஜ் என்பவருக்கு வலது கால் பெரு விரல் துண்டிக்கப்பட்டு ரத்த காயம் ஏற்பட்டது. சம்பு என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டு இருவரையும் சிகிச்சைக்காக தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்து இருவரையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC.1941/2025**

**Prosecution witness : அ.சா.4** **Date : 23.01.2026.**

| | |
|---|---|
| **Name : மாது** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பஞ்சுகாளிப்பட்டியில் குடியிருந்து தறி நெய்து வருகிறேன். கடந்த 09.09.2024ம் தேதி இரவு 9 மணிக்கு புஷ்பராஜ் என்பவர் மோட்டார் சைக்கிளில் சம்பு என்பவரை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு தொப்பூரிலிருந்து மேச்சேரி சாலையில் சென்று கொண்டிருந்த போது அதே சாலையில் எதிர்திசையில் மேச்சேரி பக்கமிருந்து வந்த இரு சக்கர வாகனம் வேகமாக வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள்.

2) புஷ்பராஜ் என்பவருக்கு வலது கால் பெரு விரல் துண்டிக்கப்பட்டு ரத்த காயம் ஏற்பட்டது. சம்பு என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டு இருவரையும் சிகிச்சைக்காக தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சேர்த்தார்கள். கடந்த 12.09.2024ம் தேதி மதியம் 12.00 மணிக்கு தொப்பூர் டூ மேச்சேரி சாலையில் கணபதி சூப்பர் மார்க்கெட் முன்பாக மேச்சேரி போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள்.

3) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.**

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.